# ஓசூர் நகராட்சி

## திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்

இம்மாநகராட்சியின் மொத்த வார்டுகள் 45 ஆகும். இந்நகரினை 6 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மொத்த மக்கட்தொகை 3,28,880 ஆகும். மொத்த குடியிருப்புகள் 82220 ஆகும்.

பொது சுகாதாரப் பிரிவில் தற்போது 186 துப்புரவு பணியாளர்கள் உள்ளனர். இவர்களில் 27 துப்புரவு பணியாளர்கள் நிர்வாக நலன் கருதி குடிநீர் பிரிவிலும், பொது பிரிவிலும் பணிபுரிகின்றனர். மீதமுள்ள 161 துப்புரவு பணியாளர்களுடன் 520 எண்ணிக்கை தனியார் மூலம் பணிபுரியும் பணியாளர்கள் ஆக மொத்தம் 681 பணியாளர்களை கொண்டு நகரிலுள்ள அனைத்து பகுதிகளிலும் துப்புரவு பணிகள், நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 11 சிறிய உரம் தயாரிக்கும் மையங்களில் குப்பைகளை மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என தரம் பிரித்து அவற்றில் மக்கும் குப்பைகளை உரமாக்கும் பணிகள் மற்றும் மக்காத குப்பைகளில் மறுசுழற்சி, மறுபயன்பாடு குப்பைகளை பயன்படுத்தும் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது இம்மாநகராட்சியின் மொத்தம் உள்ள 9 மினி லாரிகள், 1 டிராக்டர், 25 ஆட்டோக்கள், 125 பேட்டரி ஆட்டோக்கள், 1 காம்பாக்டர் மற்றும் 1 ஜேசிபி ஆகியவற்றை கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இம்மாநகராட்சியின் சொந்தமான உரக்கிடங்கு தாசேப்பள்ளி கிராமத்தில் 7.90 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. இங்கு மறுசுழற்சி, மறுபயன்பாடு செய்ய முடியாத மக்காத குப்பைகளை மட்டும் கொட்டப்பட்டு வருகின்றது.

மேலும் சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 2018–2019ல் 125 பேட்டரி ஆட்டோக்கள் ரூபாய் 243 செலவில் வாங்கப்பட்டு தினசரி வீடுகளில் சேகரமாகும் குப்பைகளை வாங்குவதற்கு பயன்படுகிறது. மற்றும் 18.00 செலவில் Resource Recovery Center (RRC) கட்டப்பட்டு மக்காத குப்பைகளை சேமிப்பதற்கும், மறுசுழற்சி மறுபயன்பாடு குப்பைகளை பயன்படுத்தும் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.